19.01.2023



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**EA.02/2020 in EP.10/2019 in OS.3555/1979**

**ம.சா. 1–ஜோதி, க/பெ. சுகுமார்**

**எதிர்மனுதாரர்/1ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பு குறுக்கு விசாரணை**

அருள்மிகு விநாயகர் மற்றும் திரௌபதி அம்மன் கோவில் சார்பாக நீதிமன்றம் மூலம் மனு சொத்தினை சுவாதீனம் ஒப்படைக்க சென்றபோது மனு சொத்தில் உங்களுக்கு பாத்தியம் உள்ளதாக கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். மனு சொத்து யாருக்கு பாத்தியம் என்று சொன்னால் வங்கி மூலம் நாங்கள் ஏலம் எடுத்த சொத்தாகும். மனு சொத்து அருள்மிகு விநாயகர் மற்றும் திரௌபதி அம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல, எனக்கு பாத்தியப்பட்ட சொத்து. மனு சொத்து பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.3555/1979 கோவில் சார்பாக விளம்புகை பரிகாரம் கோரி, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி தெரியாது, மனு சொத்தை திருச்சி, நீதிமன்றம் மூலமாக ஏலம் பெற்றோம். மேற்கண்ட பிரதிவாதிகளுக்கு எதிராக 30.01.1991ம் தேதி

சுவாதீனம் தீர்ப்பாணை பெற்றறுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. நான் நீதிமன்றம் மூலம் ஏலம் பெற்றேன். தற்போது மனு சொத்தை வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். அடமான வைத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என் கணவர் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். அவருக்கு தான் அது பற்றி விவரம் நன்கு தெரியும்.

(ii) மனு சொத்தில் எந்தவிதமாக வில்லங்கம் இல்லை என்று என் கணவர் வங்கியில் அடமானம் வைக்கும்போது என்னிடம் சொன்னார். அசல் வழக்கின் பிரதிவாதிகள் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து 230/1991 தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் பற்றி எனக்கு தெரியாது. பின்பு பிரதிவாதிகள் இரண்டாவது மேல்முறையீடு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கீழமை, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், இரண்டாவது மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வாதிக்கு தீர்ப்பாணை உறுதிசெய்ததால் தான் இந்த நிறைவேற்று மனுவை சுவாதீனம் எடுக்கவேண்டி மனு செய்தார் என்று சொன்னால் நான் நீதிமன்றம் மூலமாக தான் மனு சொத்தை ஏலம் எடுத்தேன்.

(iii) நீதிமன்றத்தின் மூலம் ஏலம் எடுக்கும்போது மனு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். மனு சொத்து அசல் பிரதிவாதி திருமேனிக்கோ, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கிக்கோ பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அசல் பிரதிவாதி திருமேனிக்கோ, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கிக்கோ மனு சொத்தினை ஏலம் விட உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. திருமேனிக்கு பாத்தியப்படாத சொத்தினை வங்கிக்கு அடமானம் வைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே வாதி தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது வங்கி திருமேனிக்கு எதிராக வழக்கு சொத்தை பொறுத்து தாக்கல் செய்தது சொத்து மாற்றுரிமை சட்டத்தின்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் மனுதாரர் சுவாதீனம் அடைவதை நீங்கள் தடுக்கும் வகையில் மனு தாக்கல் செய்ததது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் நீதிமன்றத்தின் மூலம் ஏலம், சுவாதீனம் எடுத்தது இந்த 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. கோவில் சொத்து என்று சொல்வதை, எங்கள் சொத்து என்று மனு தாக்கல் செய்துள்ளேன்.

19.01.2023



(iv) உங்கள் பரிகாரம் கோரி தனி அசல் வழக்கு தான் தாக்கல் செய்ய வேண்டும், இந்த மனுவின் மூலம் தீர்ப்பாணையை ரத்து செய்ய உரிமை கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கூறியபடி பரிகாரம் நீதிமன்றத்தால் வழங்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள கோரிக்கைக்கு, எந்தவிதமாக விவரமோ, சங்கதியோ, தகுந்த ஆவணமோ, முகாந்திரமோ, சட்டமுகாந்திரமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் பிரதிவாதி திருமேனி என்பவரின் வாரிசுகளின் தூண்டுதலின் அடிப்படையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு உயர்நீதிமன்ற வரை இந்த 1 ம் எதிர்மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், சுவாதீனத்தை எடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு 3555/1979 ல் நீங்கள் தரப்பினராக இல்லாததால், தீர்ப்பாணை உங்களை கட்டுப்படுத்தாது என்று சொல்வது சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் உள்ள சொத்தும், நீங்கள் நீதிமன்றம் மூலம் ஏலம் எடுத்த சொத்தும் வெவ்வேறு என்று சொன்னால் சரியல்ல.

19.01.2023



கோவில் சொத்தை எந்தவித வில்லங்க பராதீனம் செய்தாலும் கோவிலை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.